பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 02 2026** **SUNDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** பிற நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், இந்தியாவின் வலிமையை எடுத்துரைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் **23**-ஆம் தேதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**3)** காங்கிரஸ் கட்சிக்கு திமுக உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார்.

**4)** வங்கக்கடல் பகுதியில் அடுத்த **48** மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா — பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>

பிற நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், இந்தியாவின் வலிமையை எடுத்துரைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், இந்தியா **38** நாடுகளுடன் தடையற்ற வர்த்க ஒப்பந்தங்களை மேற்கொண்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

இதற்கிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு **38** நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டு சாதனை படைத்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்களால் நமது விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

காங்கிரஸ் கட்சிக்கு திமுக உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார்.

மதுரையில் கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டத்தில் பேசிய அவர், மரியாதை குறைவாக நடத்தினால், தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று கூறினார்.

திமுக நிர்வாகிகள் காங்கிரஸ் பற்றி பேசிய கருத்துகள் ஏற்புடையது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சிக்கு அவமரியாதை ஏற்படுத்தும் வகையில் பேசிய திமுக நிர்வாகிகள் மீது அக்கட்சி நடவடிக்கை எடுக்காதது ஏன் என்றும் திரு மாணிக்கம் தாகூர் வினவினார்.

அக்கட்சியை சேர்ந்த மற்றொரு நிர்வாகி திரு பிரவீன் சக்ரவர்த்தி, மகளிர் உரிமைத்தொகை திட்டம் வரவேற்கத்தக்கது என்ற போதிலும், அது தேர்தல் வெற்றியை உறுதி செய்யும் என்று நம்புவது தவறானது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

திமுக ஆட்சியில் மாணவர்கள், இளையோர், அரசு ஊழியர்கள் என அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐந்து லட்சம் அரசு வேலைகள் வழங்கப்படும் என்று திமுக தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், இதுவரை 94 ஆயிரம் பேருக்கு மட்டுமே அரசு வேலை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக ஏற்பட்டுள்ள அரசு பணியிடங்களுக்கான காலி இடங்களில் 50 சதவீதத்தைக்கூட திமுக அரசு நிரப்பவில்லை என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 23-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உச்சநீதிமன்ற உத்தரவின்படி உரிய கால அவகாசம் அளிக்கப்பட்டு இப்பட்டியல் அன்றைய தினம் வெளியிடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

மகா சிவராத்திரி இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, சிவாலயங்களில் இன்றிரவு முழுவதும் சிறப்பு பூஜைகள் நடைபெறவுள்ளன.

கோவையில் உள்ள ஈஷா யோக மையத்தில் நடைபெற்றுவரும் மகா சிவராத்திரி விழாவில் மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ஹரிஹரன் - 42 Sec. )***

<<<<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்தில் பெண்களின் பாதுகாப்பிற்காக அவசரகால உதவிக்கான பட்டன் சேவையுடன் கூடிய அரசு பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பேருந்தில் உள்ள எட்டு இடங்களில் இந்த அவசரகால பட்டன்கள் பொருத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் — 48 Sec. )***

<<<<<<<>>>>>

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் குதிரை வண்டி எல்கை பந்தயம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதனை ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — விஜயகுமார் — 30 Sec. )*

<<<<<<<>>>>>

வங்கக்கடல் பகுதியில் அடுத்த **48** மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மாநிலத்தின் சில பகுதிகளில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் நிலவக்கூடும் என்றார்.

*(Sound Byte — துரை - 37 Sec.)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கான குறைதீர் கூட்டம் வரும் **20-**ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் அறிவித்துள்ளார்.

----------

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

--------------

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை இயக்குநர் திரு மதுசூதன் ரெட்டி இன்று ஆய்வு செய்தார்.

--------------

சேலத்தில் இன்று நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு மாரத்தானில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

---------------

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

--------------

வார விடுமுறை தினமான இன்று குற்றாலத்தில் சுற்றுலாப்பயணிகள் குவிந்துள்ளனர்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா — பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

கொழும்பில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா டக்வொர்த் லூயிஸ் முறைப்படி **21** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சிட்னியில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த ஆஸ்திரேலியா, **18** ஓவரில் **133** ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

**134** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா ஐந்து புள்ளி ஒரு ஓவரில், ஒரு விக்கெட் இழப்பிற்கு **50** ரன் எடுத்திருந்த நிலையில் மழையினால் ஆட்டம் தடைபட்டது.

இதனையடுத்து, டக்வொர்த் லூயிஸ் முறைப்படி இந்தியா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

**<<<<<<<<END>>>>>>**